1981 மே 14] [திரு. என். வரதராஜன்]

கடமைப்பட்டிருக்கிறோம். கோதுமை பேர ஊழல், பூச்சி மருந்து பேர ஊழல் வழக்குகளில் சிக்கிக் கொண்டவர்கள் இன்னறக்குப் பெரிய வழக்குகளிலே அவர்கள் மாட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று தமிழ்நாட்டிலே பேசிக் கொண்டிருந்த நிலையில் மத்திய அரசு அவைகள் எல்லாம் கப் சிப் என்று ஆகிற முறையிலே கடந்த இரண்டு நாட்களாக அவைகளை வாபஸ் பெற்றிருக்கின்ற அவல நிலையை தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எதிர்க் கட்சித்தலைவர் சட்டமன்றத்தில் உறுப்பினராக இருக்கின்ற அன்பில் தர்மலிங்கம் ஆகியவர்கள் பெரிய வழக்கு களிலே மாட்டிக் கொண்டிரு கின்றார்கள் என்று தமிழ்நாட்டு மக்கள் பேசிக்கொண்டிருந்த நிலையில் இன்றைக்கு மத்திய சர்க்கார் அந்த வழக்குகளை வாபஸ் வாங்கியிருக்கிறது என்ற அவல நிலையை நாம் பார்க்கிறோம். மத்தியில் இருப்போர் அதிகாரத்தைக் கையிலே வைத்துக்கொண்டு எரிசாராயம் சம் ந்தமாக இரண்டாவது கமிஷனை அமைத்துத் தீரவேண்டும் என்று அடம்பிடிக்கிற நிலைமையை நாம் பார்க்கிறோம்.

அடம்பிடிக்கும்படியான ஒரு போக்கை நாம் பார்க்கிறோம். இந்த மாநில அரசு அப்படிப்பட்ட குற்றச்சாட்டு வந்த வுடனேயே, இன்று நாங்களாகவே ஒரு கமிஷனை அமைக்கிறோம், ஒரு நீதிபதியைப் போடுகிறோம், அது விசாரணை நடத்தும் என்று பகிரங்கமாக நாடறிய, நாமறிய அறிவித்ததற்குப் பின்னாலே இன்றைக்கு ஒரு அடம் பிடிக்கும்படியான காட்சியினை மத்திய ஆட்சியிலே இருப்பவர்கள் செய்யும்படியான ஒரு நிலையைப் பார்க் கிறோம். அப்படியானால் நம்மிடையே ஒரு கேள்வி பிறக்கிறது. அவர்கள் ஊழலை ஒழிப்பதற்காக கமிஷனை அமைக்கிறார்களா அல்லது அவர்கள் கையில் இருக்கும்படியான அதிகாரத்தைக் கொண்டு மாநில அரசுகளை மிரட்டுவதற்கு அந்த அதிகாரத்தை உபயோகப்படுத்துகிறார்களா? அதுதான் இன்றையதினம் இருக்கும்படியான கேள்வி. அப்படியானால் 1976-ஆம் ஆண்டு அவர்கள் அமைத்த கமிஷனுடைய கதி என்ன, கதை என்ன என்று இன்றைக்கு நாங்கள் பார்க்கிறோம், ஆகவே, இப்படி அவர்கள் எரிசாராயக் கமிஷனுக்கு இரண்டாவது கமிஷனை அமைக்கிறோம் என்று சொல்லுகின்ற நிலைமையை இந்த மாநில அரசு, இந்த மாநில மக்கள் ஜனநாயக ரீதியிலே எதிர்க்கிறார்கள் என்பதை வற்புறுத்தி அமர்கிறேன். என்னுடைய பேச்சைப் பின்னால் தொடர்வேன்.

10. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

ஆ. மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில், கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்

பெற்று பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப் பெற்றுள்ளதாக மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது:—

1. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1981).

2. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1981).

இ. பேரவை நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்கள்.

பேரவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவையை ஒத்திவைக்கும் முன் சில விவரங்களைப் பேரவைக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

ஏழாவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடரில் 1981–82 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் 21-3-1981 அன்று பேரவையில் அறிவிக்கப் பெற்றது. அன்று முதல் இன்றோடு சட்டமன்றப் பேரவை கூடிய மொத்த நாட்கள் —41

மாலையிலும் பேரவை நடைபெற்ற நாட்கள் 6

மொத்த நேரம் —210 மணி, 36 நிமிடங்கள்

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நிதி அலுவல்கள் — 1981-82.

1.	வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள்.	
2.	மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற நாட்கள்	25
3.	நிதி ஒதுக்க மசோதா மீது விவாதம்	1

மானியக் கோரிக்கைகள்.

1.	கொடுக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள்.	3,012
2.	அனுமதிக்கப் பெற்றவை	2,668